08.08.2025 **OS.No. 140 / 2023**

**வா.சா. 1 பெயர்: மணி க/பெ. பழனியப்பன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு திருமணம் நடந்த காலத்தில் சீர்வரிசை செய்து கொடுப்பதால் பெண்களுக்குபாகம் கொடுக்கும் வழக்கம் இருந்தது என்றால் சரிதான். எந்த சட்டத்தின் படி எனக்குசொத்து வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பெண்களுக்குசம உரிமை என்பதால் போட்டேன். 1984 ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் படி வழக்கு சொத்துகள் 1ம் பிரதிவாதிக்குவிட்டு கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல அது முதல் அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.7 பட்டா எண் 17ல் அயாக்கண்ணு மகன் சகாதேவன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் பட்டா எண் 1123 ல் குமார் மனைவி வினோதினி மற்றும் மகள்கள் இளமதி, சஞ்ஜீதா ஆகியோர் பெயரில் உள்ளது என்றாலும் அதை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. அதேபோல் என்னிடம் காட்டப்படும் பட்டா எண் 343ல் எனது கணவர்பெயரும் 1ம் பிரதிவாதி மனைவி பவளக்கொடி பெயரும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா எண்களில் எனது பெயரில் சேர்க்க சொல்லி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சுவாதீனத்தில் உள்ளேன் என்பவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஓலை வெட்டி வருகிறேன். வழக்குசொத்துக்கள் ஏரி கால்வாய் பாசனம் பெறும் ஆயக்கட்டுகள் என்றால் சரிதான். 15 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி நிலத்தின் கிணறு இல்லை என்றாலும் அதன் பின்பு தான் வெட்டப்பட்டு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணறு1ம் பிரிதிவாதிதான் செலவு செய்து தான் வெட்டினார் என்றால் சரியல்ல. எனது அப்பா இருக்கும்போதே வெட்டினார்கள். மேற்படி கிணற்றிற்கு சகாதேவன் பெயரில் மின்இணைப்பு பெறப்பட்டது என்றாலும் அதற்கு நான் ஆட்சேபணை இல்லை என்று சான்று கொடுத்தேன் என்றாலும் சரிதான். நான் சொத்து சுவாதீனத்தில் அனுபவத்தில் இல்லை என்பதால் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. தேங்காய் எடுத்துக்கொண்டும், சோளம் வெட்டிக்கொண்டும் வருகிறேன். மேற்படி கிணற்றில் மின் மோட்டார் உள்ளது என்றால் சரிதான் அது எந்த வகையான மின் மோட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்தில் எனக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பாகம் கோர எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என கூறினால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை (நீதிமன்ற அனுமதியுடன் )**

பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எனது ஆதார் அட்டை, நிரந்தர கணக்குஎண் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணங்களின் அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல்கள் முறையே வா.சா.ஆ.13 முதல் 16 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**மீண்டும் குறுக்கு விசாரணை**

எனக்குஊரில் சின்னம்மாள் என்ற புனை பெயர் உள்ளது என்றால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.